**இலங்கை மீன்பிடி துறைமுகக் கூட்டுத்தாபனம் - 2024**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பராயம்

இலங்கை மீன்பிடி துறைமுகக் கூட்டுத்தாபனத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் கலந்துரையாடியுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக்கூற்றக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகள் பெற்றுக்கொள்வதற்கு என்னால் முடியவில்லை.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் மறுப்பு அபிப்பிராயத்தை வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்ள முடியவில்லை.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனம் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும், அபிப்பிராயத்தை மறுப்பதற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான ஒரு அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாதுள்ளேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வ அவதானிப்பு

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியத்துடன் தொடர்பான இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 07** | | |
| (i) | மீளாய்வாண்டில் நடைமுறை வேலைகளிற்காக மேற்கொண்ட ரூபா 3,695,306 ஆன கிரயம் நியமத்தின் பந்தி இலக்கம் 16 (அ) இற்கு முரணாக முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் இனங்காணாமை, நீண்டு கால சொத்துக்களை கையகப்படுத்தலிற்காக ஆண்டினுள் செலுத்திய ரூபா 22,659,424 தொகையை ரூபா 70,820,258 ஆக இனங்கண்டிருந்த காரணத்தால் முதலீட்டு செயற்பாடுகளினால் ஈட்டியிருந்த தேறிய காசு பாய்ச்சல் ரூபா 44,465,528 இனால் குறைந்திருந்தது. | இணங்குகிறேன். குணக்காய்வினால் சுட்டிக் காட்டியுள்ள அனைத்து விடயம் தொடர்பாகவும் கவனம் செலுத்தி மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 பிரகாரம் தவறுகளை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | நியமத்தின் பந்தி இலக்கம் 31 பிரகாரம் மீளாய்வாண்டில் பணத்தால் கிடைத்த ரூபா 4,484,141 தொகையான வட்டி தொடர்பாக எவ்வித வெளிப்படுத்தல் காசுப்பாய்ச்சலினுள் மேறகொள்ளப்பட்டிருக்கவில்லை. | இணங்குகிறேன். குணக்காய்வினால் சுட்டிக் காட்டியுள்ள அனைத்து விடயம் தொடர்பாகவும் கவனம் செலுத்தி மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 பிரகாரம் தவறுகளை சரி செய்ய நடவடிக்கை | இலங்கை கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | எடுக்கப்பட்டுள்ளது. | |
| (iii) | நியமத்தின் பந்தி இலக்கம் 43 மற்றும் 44 இற்கு முரணாக ரூபா 2,215,769 ஆன 10 ஆண்டுகளிற்கு அதிக காலமாக நிலவிவரும் அன்பளிப்பு திரண்ட இலாபத்திற்கு (Prompeached Receipt) செம்மையாக்கல் காசு பாய்ச்சல் கூற்றில் காச உட்பாய்ச்சலாக இனங்கண்டிருந்ததால் முதலீட்டு செயற்பாட்டுகளின் கீழ் தேறிய காசு பாய்ச்சல் அப் பெறுமானத்தால் அதிகரித்திருந்தது | இணங்குகிறேன். குணக்காய்வினால் சுட்டிக் காட்டியுள்ள அனைத்து விடயம் தொடர்பாகவும் கவனம் செலுத்தி மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 பிரகாரம் தவறுகளை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | காசு பாய்ச்சல் கூற்றை தயாரிக்கும் போது, மொத்த கடன்படுனரை அடிப்படையாக்க கொண்டு செயற்படு மூலதன மாற்றத்தை இனங்காண வேண்டிய போதும் கூட்டுத்தாபனத்தால் நிதி நிலைமை கூற்றில் நிலவிய தேறிய கடன்படுனரை அடிப்படையாக்க கொண்டு செயற்பாட்டு மூலதன மாற்றத்தை சீராக்கிய காரணத்தால் ரூபா 2,461,611 இனால் செயற்பாட்டு நடவடிக்கையின் கீழான தேறிய காசு பாய்ச்சல் அதிகரித்திருந்தது. | காசு பாய்ச்சல் கூற்றை தயாரிக்கும் போது இடம்பெற்றுள்ள கணக்கீட்டு தவறுகளை சரிசெய்து காசு பாய்ச்சல் கூற்றை மீண்டும் தயாரிக்க நடவடிக்கை எடுக்கிறேன். | காசு பாய்ச்சல் கூற்றை தயாரிக்கும் போது மொத்த கடன்படுனரை அடிப்படையாகக் கொண்டு செயற்பாடு மூலதன மாற்றத்தை இனங்காண வேண்டும். |
| (v) | விரிவான வருமானக் கூற்றில் செயற்படு வருமானத்தினுள் வருமானமாக இனங்காணப்பட்ட ரூபா 1,259,793 ஆன அபராதம் மற்றம் மிகை அறவீடு உள்ளடக்கப்பட்டிருக்கையில் மீண்டும் காசு பாய்ச்சல் கூற்றில் அப்பெறுமதியை வரிக்கு முந்திய இலாபத்திற்கு சேர்க்கப்பட்ட காரணத்தால் அப் பெறுமதியால் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகும் தேறிய காசுப்பாய்ச்சல் அதிகரித்திருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்றை தயாரிக்கும் போது இடம்பெற்றுள்ள கணக்கீட்டு தவறுகளை சரிசெய்து காசு பாய்சலை மீண்டும் தயாரிக்க நடவடிக்கை எடுக்கிறேன். | காசு பாய்ச்சல் கூற்றை தயாரிக்கும் போது சீராக்கத்தை சரியாக செய்ய வேண்டும். |
| (vi) | மீளாய்வாண்டில் வியாபார செலுத்த வேண்டியவை மாற்றம் ரூபா 18,012,887 ஆன நேர் தாக்கமொன்றான போதும் காசு பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு மூலதன மாற்றத்தின் கீழ் ரூபா 17,902,867 ஆன மறை தாக்கமொன்றாக இனங்கண்டுள்ள காரணத்தால் ரூபா 35,915,754 இனால் செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவாகும் தேறிய காசு பாய்ச்சல் குறைந்திருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்றை தயாரிக்கும் போது இடம்பெற்றுள்ள கணக்கீட்டு தவறுகளை சரிசெய்து காசு பாய்சலை மீண்டும் தயாரிக்க நடவடிக்கை எடுக்கிறேன். | வியாபார செலுத்த வேண்டியவை மாற்றம் காசு பாய்ச்ச ல் கூற்றில் செயற்பாட்டு மூலதன மாற்றத்தின் கீழ் சரியாக இனங்காண வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (vii) | முற்செலுத்தல்களின் மாற்றம் ரூபா 4,778,452 ஆன நேர் தாக்கமான போதும் அதனை காசு பாய்ச்சல் கூற்றில் அதனை செயற்படு மூலதன மாற்றத்தின் கீழ் நேர் தாக்கமாக இனங்கண்டுள்ள காரணத்தால் ரூபா 9,556,904 இனால் செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவாகும் தேறிய காசு பாய்ச்சல் குறைந்திருந்தது. . | காசுப்பாய்ச்சல் கூற்றை தயாரிக்கும் போது இடம்பெற்றுள்ள கணக்கீட்டு தவறுகளை சரிசெய்து காசு பாய்சலை மீண்டும் தயாரிக்க நடவடிக்கை எடுக்கிறேன். | முன்னைய கொடுப்பனவுகளில் மாற்றங்கள் காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்படு மூலதன மாற்றங்களின் கீழ் சரியாக இனங்காண வேண்டும். |
| **(ஆ)** | **இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08** | | |
| (i) | நியமத்தின் பந்தி இலக்கம் 42 மற்றும் 43 இல் காட்டப்படுவதன் பிரகாரம் கடந்த ஆண்டில் ருஹுனு புதா கப்பலிற்கு எரிபொருள் வழங்கியது தொடர்பாக தலைமை அலுவலகத்தினால் பேருவலை துறைமுகத்திற்கு செலுத்திய ரூபா 5,272,100 ஆன எரிபொருளிற்கான செலவினை இதுவரை செலவாக கணக்கு வைக்காது பேருவலை துறைமுகத்தின் காசுப் புத்தகத்திற்கு தலைமை அலுவலகத்தினால் வரவு வைக்கப்பட்டிருந்தது.. | இணங்குகிறேன். 2025 ஆண்டில் ஜர்னல் இலக்கம் 30 ஊடாக முன்னைய ஆண்டு செம்மையாக்கல் மேற்கொண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | நியமத்தின் 42 பந்தி பிரகாரம் கடந்த ஆண்டுகளில் இடம்பெற்ற கூட்டுத் தொகை ரூபா 29,092,873 ஆன தவறினை சரிசெய்தலை வெளிப்படுத்தாது திரண்ட இலாபத்தின் ஆரம்ப மீதியிற்கு செம்மையாக்கப்பட்டு இருந்தது. | கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் 49 ஆம் பந்தி பிரகாரம் முன்னைய காலப் பகுதிக்குரிய தவறு சரிசெய்தல் செம்மையாக்கப்படுகின்றது. | இலங்கை கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | கூட்டுத்தாபனத்தின் 24 துறைமுகங்களில் மீளாய்வாண்டில் எரிபொருள் மற்றும் எரிவாயு ஆரம்ப இருப்பு மற்றும் இறுதி இருப்பு துறைமுகங்களின் செயற்பாட்டு இலாப கணிப்பீட்டின் போது கவனத்திற் கொண்டுள்ள போதும் மீண்டும் ஒருமுறை இருப்புகளிற்கு இடையிலான வித்தியாசமான ரூபா 33,354,672 ஆன நிறுத்தி வைத்தல் பெறுமதியை நிறுத்தி வைத்தல் ஈட்டுதல்களிற்கு வரவ வைக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறவிக்கிறேன். | நிறுத்தி வைத்த ஈட்டுதல்களை சரியாக இனங்காண வேண்டும். |
| (iv) | 2023 ஆண்டில் பேருவலை மீன்பிடி துறைமுகத்தில் ஏலவிற்பனை மண்டபத்தின் கூறையை விச்தரிக்கும் செயற்திட்டத்திற்காக செலவிட்ட ரூபா 2,220,772 இனை அந்த ஆண்டின் சொத்துக்களிற்கு வரவ வைக்காது செலவிற்கு வரவு வைத்த தவறை | இணங்குகிறேன். சரிசெய்ய குறித்துக் கொண்டேன். | குறித்த செலவை பிற்போட்டதாக நிதிக்கூற்றுக்களில் இனங்காண வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சீராக்கும் போது நடைமுறை ஆண்டில் திருத்தம் மற்றும் பராமரிப்பு செலவினக் கணக்கிற்கு செலவு வைத்து சொத்துக்கள் கணக்கிற்கு வரவு வைத்த காரணத்தால் மீளாய்வாண்டில் இலாபம் அப் பெறுமதியால் கூடுதலாக காட்டப்பட்டது. | | |
| **(இ)** | **இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16** | | |
| (i) | நியமத்திற்கு மாற்றமாக மீளாய்வாண்டில் கொள்வனவு செய்த ரூபா 68,633,726 ஆன சொத்துக்களிற்காக முழு ஆண்டிற்கும் பெறுமானத் தேய்வு கணிப்பீடு செய்த காரணத்தால் ரூபா 2,478,109 இனால் இலாபம் குறை கணப்பீடாகி திரண்ட பெறுமானத் தேய்வு அப் பெறுமானத்தால் அதிகரித்திருந்தது. | 2025 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது அதிகமாக கணிப்பிட்டுள்ள பெறுமானத் தேய்வு அளவுகளை மீண்டும் கணக்குகளிற்கு சீராக்கி சரிசெய்யவும், ஆதன, பொறிகள், உபகரணங்களின் முன்கொண்டு சென்ற பெறுமதியை சீராக்கி சரிசெய்ய குறித்துக் கொண்டேன். | இலங்கை கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | அந்த நியமத்தின் பந்தி இலக்கம் 7 மற்றும் 55 இற்கு முரணாக 2024 ஆண்டில் கொள்வனவு செய்துள்ள ரூபா 4,299,900 ஆன உதிரிப் பாகங்கள் 2025 ஜுலை 03 ஆம் திகதி இயற்திரத்திற்கு பொருத்தப்பட்டிருந்த போதும் 2024 ஆண்டில் மூலதனமாக்கி, ரூபா 429,999 பெறுமானத் தேய்வு செம்மையாகியுள்ளதால் ஆண்டின் இலாபம் அப் பெறுமானத்தால் குறைந்து ரூபா 3,869,910 இனால் ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்களின் முன்கொண்டு சென்ற பெறுமதி அதிகரித்திருந்தது. அவ்வாறே 2021 ஆண்டு முதல பயன்படுத்திவரும் ரூபா 6,689,000 ஆன இயந்திரங்கள் மீளாய்வாண்டினுள் மூலதனமாக்கப்பட்ட போதும் கடந்த ஆண்டிற்காக ரூபா 1,736,183 ஆன பெறுமானத் தேய்வு கணக்கீடு செய்யப்படாததால் நிறுத்தி வைத்த இலாபம் அதிகமாகவும் திரண்ட பெறுமானத் தேய்வு அப் பெறுமானத்தால் குறைத்தும் காட்டப்பட்டது. | இணங்குகிறேன். மீளாய்வாண்டில் சொத்தாக மூலதனமாகியிருந்த ரூபா 4,299,900 பெறுமதி மற்றும் பெறுமானத் தேய்வாக செம்மையாக்கியிருந்த ரூபா 429,990 பெறுமதி 2025 ஆண்டில் ஜர்னல் இலக்கம் 26 ஊடாக செம்மையாக்கப்பட்டுள்ளது. ரூபா 6,689,000 பெறுமதியுடைய எரிபொருள் உந்தியை கொள்வனவு செய்வது தொடர்பாக, துறைமுகங்களினால் பண்டங்கள் கிடைத்ததாக வழங்கப்படும் GRN இல் 2021 திசெம்பர் மாதமாக திகதி குறிப்பிடப்பட்டுள்ளது. இயந்திர பிரிவினால் நிதி பிரவிற்கு பணிகளை நிறைவு செய்ததாக 2024 ஆண்டு குறிப்பிடப்பட்டுள்ளதால் இந்த சொத்துக்களிற்குரியதாக 2024 ஆண்டில் பெறுமானத் தேய்வு செம்மையாக்கப்பட்டது. இந்த சொத்து துறைமுகங்களிற்கு பொருத்தி பயன்படுத்திய திகதி தொடர்பாக மீண்டும் பரீட்சித்துப் பார்த்து சரியாக பெறுமானத் தேய்வை | இலங்கை கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கணிப்பிட்டு செம்மையாக்க நடவடிக்கை எடுக்கிறேன். | |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 ஆண்டின் எரிபொருள் முற்பணமாக செலுத்தப்பட்ட ரூபா 129,102,045 தொகை கொள்வனவாக இனங்கண்டு இருந்தமை காரணத்தால் விற்பனை கிரயம் அதிகரித்து மொத்த இலாபம் அந்த பெறுமதியால் குறைந்திருந்தது. | இணங்குகிறேன். 2025 ஆண்டு நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது எரிபொருளை இறுதி இருப்பாக இனங்கண்டிருக்காத வழியில் இருப்பை மற்றும் கொள்வனவாக எடுத்திருக்காத எரிபொருள் இருப்பை மீண்டும் பரீட்சித்து குறித்த துறைமுகங்களில் இருப்புக்களிற்கு சீராக்கி சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | எரிபொருள் முற்பணமாக செலுத்தப்பட்ட தொகையை சரியாக கணக்கீடு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 14,220,432 தொகையான எரிபொருள் இருப்பு கொள்வனவாக கணக்கீடு செய்யாத காரணத்தால் இலாபம் அதிகரித்திருந்ததுடன் கடன்கொடுனரும் அந்த அளவால் குறைந்திருந்தது. | ஏற்றுக்கொள்கிறேன், 2025 ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது எரிபொருள் இறுதி இருப்பாக இனங்கண்டிருக்காத வழியில் இருப்பு மற்றும் கொள்வனவாக எடுத்திருக்காத எரிபொருள் இருப்பு மீண்டும் பரிசோத்தித்து உரிய துறைமுகங்களில் இருப்புகளிற்கு செம்மையாக்கி சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். | எரிபொருள் இருப்பு கடனுக்கு கொள்வனவு செய்வதை சரியாக கணக்கீடு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | கடந்த ஆண்டு எரிபொருள் முற்பணமாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 58,580,899 தொகை அந்த ஆண்டில் கொள்வனவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதும், அந்த தவறை சரி செய்து இருக்காத காரணத்தால் மீளாய்வாண்டில் இலாபம் மற்றும் திரண்ட நட்டம் அந்த பெறுமானத்தால் அதிகரித்திருந்தது. | ஏற்றுக்கொள்கிறேன், 2025 ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது எரிபொருள் இருப்பு செம்மையாக்கம் செய்து சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | கடந்த ஆண்டிற்குரிய எரிபொருள் முற்பணம் சரியாக கணக்கீடு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | கடந்த ஆண்டில் கடனிற்கு கொள்வனவு செய்திருந்த ரூபா 38,125,799 ஆன எரிபொருள் அந்த ஆண்டில் கொள்வனவு கணக்கிற்கு வரவு வைத்து கடன்கொடுனர் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருக்காததுடன் அந்த ஆண்டில் இறுதி இருப்பிற்கு சேர்க்கப்பட்டிருந்தது. நடைமுறை ஆண்டில் அதற்காக பணம் செலுத்தும் போது கொள்வனவு கணக்கை வரவு வைத்த காரணத்தால் நடைமுறை | ஏற்றுக்கொள்கிறேன், 2025 ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது எரிபொருள் இருப்பு செம்மையாக்கம் செய்து சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | கடந்த ஆண்டிற்குரிய எரிபொருள் கடனிற்கு கொள்வனவு செய்வதனை சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டில் கொள்வனவு அதிகரித்து அப் பெறுமதியால் இலாபம் முறைவடைந்திருந்தது. | | |
| (உ) | ஐயக்கடன் ஒதுக்கீடு தொடர்பாக கூட்டுத்தாபனத்தின் கொள்கையாக தெரிவு செய்த கடன்படுனர்களின் 5 சதவீதம் ஐயக்கடனாக ரூபா 2,461,611 ஒதுக்கிய போதும் கடன்படுனர்களை தெரிவு செய்யும் அடிப்படையை கணக்காய்விற்கு வெளிப்படுத்தாததன் மீது அதன் சரியான தன்மை உறுதியாகவில்லை. அவ்வாறே கூட்டுத்தாபனத்தின் வாகனங்கள் மற்றும் ஏனைய இயந்திரங்களிற்கான துறைமுகத்திடம் பெற்றுக் கொண்ட ரூபா 80,364,155 ஆன எரிபொருள் வட்டத்தை கடன்படுனராக கணக்கீடு செய்து அதற்காக 5 சதவீத ஐயக்கடனாக ரூபா 4,018,207 தொகை இலாபத்திலிருந்து கழிக்கப்பட்டிருந்தது. | 2025 ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது கடன்படுனரை தெரிவு செய்யும் அடிப்படையை வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கிறேன். கூட்டுத்தாபனம் வாகனம் மற்றும் ஏனைய இயந்திரங்களிற்காக துறைமுகத்திடம் பெற்றுக் கொள்ளும் எரிபொருளிற்காக செலுத்த வேண்டிய பெறுமதியை சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதுடன், சேத நட்டமாக கணக்கீடு செய்துள்ள பெறுமதியை பரீட்சித்து மீண்டும் கணக்குகளிற்கு சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஐயக்கடனாக தெரிவு செய்யும் அடிப்படையை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டியதுடன் கூட்டுத்தாபனம் வாகனம் மற்றும் ஏனைய இயந்திரங்களிற்காக துறைமுகத்திடம் பெற்றுக் கொள்ளும் எரிபொருளிற்கான செலவை குறித்த ஆண்டில் செலவாக இனங்காண வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டில் தலைமை அலுவலகத்தில் வாகனத்திற்காக ரூபா 29,965,029 ஆன எரிபொருள் துறைமுகங்களின் எரிபொருள் கூடங்களின் மூலம் பெற்றுக் கொண்டுள்ளதுடன் அவற்றில் ரூபா 27,174,549 தொகை தலைமை அலுவலகத்தினால் குறித்த துறைமுகங்களிற்கு செலுத்தப்பட்டிருந்தது. செலுத்திய இந்த தொகையை மாத்திரம் ஆண்டின் செலவாக இனங்கண்டிருந்த காரணத்தால் ரூபா 2,790,480 இனால் மீளாய்வாண்டின் இலாபம் அதிகமாக காட்டப்பட்டிருந்தது. | 2024 ஆண்டிற்குரியதாக எரிபொருள் செலவாக இனங்கண்டிருக்காத பெறுமதியான ரூபா 2,790,480 தொகை கடந்த ஆண்டின் சீராக்கமாக கணக்கீடு செய்து சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | மீளாய்வாண்டில் மேற்கொண்ட மொத்த எரிபொருள் செலவையும் நிதிக்கூற்றுக்களில் செலவாக இனங்காண வேண்டும். |
| (எ) | காசு புத்தகம் பிரகார மீதியை நிதி நிலைமை கூற்றில் வங்கி மீதியாக குறிப்பிட வேண்டிய போதும், குடாவெல்ல மீன்பிடி துறைமுகத்தில் எரிபொருளிற்குரிய காசு கணக்கில் ரூபா 8,605,608 குறைவாகவும், ஏனைய வருமானங்களிற்குரிய காசு கணக்கில் ரூபா 5,647,889 கூடுதலாகவும், அம்பலங்கொட மீன்பிடி துறைமுகத்தில் எரிபொருளிற்குரிய காசு கணக்கில் ரூபா 2,908,200 கூடுதலாகவும், சுதுவெல்ல மீன்பிடி துறைமுகத்தில் எரிபொருள்களிற்குரிய காசு கணக்கில் ரூபா 904,901 குறைத்தும் | குடாவெல்ல மீன்பிடி துறைமுகத்தில் எரிபொருள் மற்றும் ஏனைய வருமானங்களிற்குரிய வங்கிக் கணக்குகளின் மீதிகளில் இடம்பெற்ற முறைகேடுகள் காரணமாக அடிப்படை ஆவணங்கள் காணாமல் ஆக்கப்பட்டிருந்ததுடன், காணப்படும் அடிப்படை ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது. | திருத்திய காசு புத்தகத்தின் பிரகாரம் சரியான மீதியை, நிதி நிலைமை கூற்றில் சமர்ப்பிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காட்டப்பட்டிருந்தது. | அடிப்படை ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் இல்லாததால் இந்த மீதிகளை சரிசெய்ய முடியாதுள்ளது. கணக்கீடு செய்யும் போது இடம்பெற்ற தவறுகள் காரணமாக அம்பலங்கொட மற்றும் சுதுவெல்ல மீன்பிடி துறைமுகங்களின் வங்கி மீதிகளில் வித்தியாசம் ஏற்பட்டுள்ளதுடன், சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஏ) | துறைமுகத்திற்கு கிடைக்கும் பணம் தினத்தோரும் வங்கியில் இடப்பட வேண்டிய போதும் பேருவலை மற்றும் பானதுரை மீன்பிடி துறைமுகங்களின் கையிருப்பு மீதியாக ரூபா 1,009,424 தொகை மற்றும் ரூபா 440,257 தொகை பல வருடங்களிலிருந்து நிதிக்கூற்றுக்களினுள் முன்கொண்டு செல்லப்பட்டு வருவதுடன் அந்த மீதிகள் சரி செய்யவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பேருவலை மற்றும் பானதுரை மீன்பிடி துறைமுகங்களின் கையிருப்பு மீதிளை பரீட்சித்து பார்த்து சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | துறைமுகத்திற்கு கிடைக்கும் பணம் தினத்தோரும் வங்கியில் இடப்பட வேண்டியதுடன் உரிய மீதிகளை விரைவில் வங்கியில் :டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் ஒதுக்க பெறுமதி ரூபா 7,663,412,677 தொகையானதுடன் குறிப்பு இலக்கம் 05 மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அட்டவணை பிரகாரம் அது ரூபா 7,695,184,745 தொகை ஆனதால் மீதிகளிற்கிடையில் ரூபா 31,772,068 தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதென அறிவிக்கிறேன். | ஒதுக்கம் தொடர்பாக ளெிப்படுத்துவது குறிப்பு மூலம் சரியாக சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வெண்டும். |
| (ஒ) | 2023 இன் 32 இலக்க பெறுமதி சேர் வரி (திருத்திய) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டில் ரூபா 20,462,821,449 தொகையான எரிபொருள் விற்பனை மற்றும் ரூபா 19,960,399,111 தொகையான எரிபொருள் கொள்வனவின் மிது வரி சீராக்கம் செய்யாது மொத்த பெறுமதியையும் கணக்கீடு செய்யப்பட்டதனால் எரிபொருள் வருமானத்தை மற்றும் எரிபொருள் செலவினத்தை மிகை கணிப்பீடாகிருந்தது. | 2025 ஆண்டில் முன்னைய ஆண்டு செம்மையாக்கலாக சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. | கொள்வனவு மற்றும் விற்பனை மீதான பெறுமதி சேர் வரி சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

| | விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா | தொடர்புடைய பதிவேட்டின் பிரகாரம் ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | எரிபொருள் இருப்பு-குடாவெல்ல மீன்பிடி துறைமுகம் | 6,778,563 | 1,554,802 | 5,223,761 | குடாவெல்ல மற்றும் தொடந்தூவ மீன்பிடி துறைமுகங்களில் எரிபொருள் இருப்பில் வேறுபாட்டை கண்டறிந்து சரிசெய்ய குறித்துக் கொண்டேன். | உரிய அட்டவணைகள் மற்றும் உரிய பேரேட்டு கணக்குகளிற்கு இடையில் காணப்படும் வேறுபாடுகளை இனங்கண்டு தேவையான சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | எரிபொருள் இருப்பு-தொடந்தூவ மீன்பிடி துறைமுகம் | 1,462,701 | 32,610 | 1,430,091 | | |

### 1.5.4 கணக்காய்விற்கான ஆவணரீதியான சான்றுகள் இல்லாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 திசெம்பர் 31 திகதி நிதிக்கூற்றுக்களில் காட்டியிருந்த கூட்டுத் தொகை ரூபா 1,873,926,285 ஆன பல்வெறு நிறுவனங்களிடமிருந்து கிடைத்த மானியங்களிற்குரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறே கூட்டுத் தொகை ரூபா 206,728,293 ஆன கடன்படுனர் மீதிகளிற்குரிய அட்டவணை, தனிக் கடன்படுனர் மீதி, வயதுப் பகுப்பாய்வு மற்றும் மூல ஆவணங்கள் உள்ளடங்களாக கூட்டுத் தொகை ரூபா 160,288,685 ஆன கடன்கொடுனர் மீதி மற்றும் ரூபா 8,610,910 ஆன திவிசெரிய கணக்கின் மீதியை உறுதி செய்து கொள்ள தேவையான மூல ஆவணங்கள், அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள மீதிகளை உறுதி செய்து கொள்ள போதிய சான்றுகள் இல்லாத மீதிகளாக குறிப்பிட்டுள்ள அநேக மீதிகள் நீண்ட காலமாக கணக்குகளின் ஆரம்ப மீதிகளாக நிலவிவருவதுடன், இது தொடர்பபான தகவல்களை கண்டறிய பல சந்தர்ப்பங்களில் குழுக்கள் நியமிக்கப்பட்டதுடன், அந்த குழுக்களிற்கும் போதிய சான்றுகளை கண்டறிய முடியவில்லை.<br>இங்கு குறிப்பிடப்படும் காணி, கட்டிடம், பாதுகாப்பு கடன்பெறல் மற்றும் திக்ஓவிட பழைய கடன் மீதிக்காக அட்டவணை மற்றும் வயதுப் பகுப்பாய்வு அரச கணக்காய்வு பிரிவிற்கு வழங்க நடவடிக்கை எடுக்கிறேன். | குறித்த மீதிகளை உறுதி செய்து கொள்ள தேவையான எழுத்துமூல சான்றுகளை கணக்காய்சவிற்கு சமர்ப்பிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டில் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றினுள் ஒதுக்க மாற்றமாக ரூபா 29,092,874 பெறுமதியொன்றை திரண்ட நட்டத்திலிருந்து குறைத்து காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த பெறுமதியை குறைப்பதற்கு காரணங்கள் தொடர்பாக சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததனால் அந்த பெறுமதியின் சரியான தன்மையை கணக்காய்வின் போதுஉறுதி செய்துகொள்ள முடியவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதென அறிவிக்கிறேன். | உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றினுள் ஒதுக்க மாற்றத்தை சரியாக இனங்காண வேண்டும். |
| (இ) | உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றினுள் ஆண்டினுள் ஒதுக்க மாற்றங்களாக ரூபா 24,494,262 ஆன பெறுமதியொன்று கழித்து காண்பிக்கப்பட்டிருந்த போதும், அதற்குரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததனால் அதன் சரியான தன்மைமையை உறுதிப்படவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதென அறிவிக்கிறேன். | ஒதுக்க மாற்றமாக இனங்கண்ட பெறுமதிக்காக அதற்குரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2009 சனவரி, பெப்ரவரி, மார்ச் மற்றும் ஜுன் மாதங்களிற்குரியதாக கொட்பே கடற்றொழில் துறைமுகத்தினால் கிழக்கு மாகாண சபை உறுப்பினரிற்கு சொந்தமான மீன்பிடி படகுகள் மற்றும் வாகனங்களிற்கு டீசல் கடனிற்கு வழங்கியதற்காக கிடைக்க வேண்டிய ரூபா 1,379,685 தொகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த கடன் தொகையை அறவிடுவதற்காக தவையான செயற்பாடுகளை எடுப்பதற்காக துறைமுக செயற்பாட்டுப் பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | விரைவில் கடன் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | துறைமுகங்களில் ஆதனங்களை வெளித்தரப்பினரிற்கு வாடகைக்கு வழங்குவது தொடர்பாக கிடைக்க வேண்டிய மீதி ரூபா 187,555,960 ஆனதுடன் அந்த மீதியிலிருந்து பத்து துறைமுகைங்களிற்குரிய ரூபா 156,998,780 தொகை 5 ஆண்டுகளை விஞ்ஞிய மீதியானது. 2025 ஆகஸ்ட் 21 திகதி வரையும் குறித்த மீதிகளை அறவிட கூட்டுத்தாபனம் போதிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெற வேண்டிய வாடகை வருமானத்தில் 05 ஆண்டுகளிற்கு அதிக மீதிகளை அறவிடுவதற்காக உரிய தரப்பினர்களிற்கு எதிராக வழக்கு தாக்கழ் செய்யப்பட்டுள்ளதுடன், அந்த வழக்கு நடவடிக்கைகள் இன்னும் விசாரிக்கப்பட்டுவருகிறது. | தொடர்புடைய மீதிகளை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டம். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2013 ஆண்டுக்கு முன்னரிலிருந்து நிலவி வரும் தேசிய நீர் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவரான்மையில் இலிருந்து அறவிட வேண்டிய ரூபா 3,952,983 ஆன கிடைக்க வேண்டிய பாதுகாப்பு கட்டணத்தை அறவிட கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தேசிய நீரியல்வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவரான்மையின் வரிசை அமைச்சின் கீழ் காணப்படும் நிறுவனமொன்றாகையால் உடன்படிக்கையின்றி அந்த நிறுவனங்களிற்கு பாதுகாப்பு செவையை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒழுங்கான உடன்படிக்கை இல்லாத காரணத்தால் ரூபா 3,952,983 ஆன கிடைக்க வேண்டிய பெறுமதியை அறவிடுவது பிரச்சினைக்கு உரியதாகவுள்ளது. | அறவிடுவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டிய பணம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 திசெம்பர் 31 திகதி கடன்கொடுனர் மீதியினுள் நீண்ட காலமாக நிலவிய ரூபா 36,071,363 ஆன மீதிகளை தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடன்கொடுனர் பெறுமதியினுள் உள்ள ரூபா 36,071,363 ஆன மீதிகள் நீண்ட காலமாக தொடர்ந்து நிலவிவரும் மீதியாவதுடன், இது தொடர்பாக 2025 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தாயரிக்கும் போது தீர்க்க நடவடிக்கை எடுப்பதென. | தீர்ப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை விரைவில் எடுக்க வேண்டும். |

**1.7 சட்டம், விதி, பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மைகள்**

| | சட்டம், விதி, பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2002 இன் 14 இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டம் மற்றும் 2014 இன் 07 இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டம் (திருத்திய) வரிச் சட்டம் | | | |
| (i) | 26 ஆம் பிரிவு | ஏதேனும் வரி அறவிட முடியுமான காலஎல்லை தொடர்பான வரியை அந்த | இந்த பெறுமதியை 2025 சனவரி மாதம் தீர்க்க நடவடிக்கை | பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வரியை அறவிட முடியுமான காலஎல்லை முடிவடைந்த பின்னர் எதிர்வரும் மாதம் 20 ஆம் திகதியின் பின்னர் திகதி குறிப்பிடப்படாத திகதியொன்றில் செலுத்த வேண்டிய போதும் 2025 ஏப்ரல் 30 திகதிக்கு செலுத்தப்படாத 2024 ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளிற்குறிய பெறுமதி சேர் வரி கடப்பாடு ரூபா 26,325,272 ஆனது. | எடுக்கப்பட்டுள்ளது. | பிரகாரம் உரிய திகதியில் செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 22 (2) மற்றும் 22 (6) (III) பிரிவு | மீளாய்வாண்டில் நிதி நிலைமை கூற்றின் பிரகாரம் சுமார் 10 ஆண்டுகளிற்கு அதிக காலமாக நிலவிவரும் பெறவேண்டிய பெறுமதி சேர் வரி பெறுமதி ரூபா 14,175,147 ஆனதுடன் தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த மீதிகள் நீண்ட காலமாக நிலவிவரும் மீதியாவதுடன் இது தொடர்பான ஆரம்ப புத்த ஏடுகளை மீள் பரீட்சித்து 2025 ஆண்டில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | பெறவேண்டிய பெறுமதி சேர் வரி பெறுமதி தொடர்பாக கண்டறிந்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| (i) | நி.பி. 135 | திக்ஓவிட மீன்பிடி துறைகத்தில் இருந்து பெற்ற எரிபொருள் வவுசர் மாதிரியின் 4 கொடுப்பனவு வவுசர்கள் தொடர்பாக ரூபா 57,137,850 பெறுமதிக்காக கொடுப்பனவு வவுசர்கள் உறுதிப்படுத்தாது செலுத்தப்பட்டிருந்தன. | காசோலை கைபொப்பமிடும் அதிகாரம் துறைமுக முகாமையாளரிற்கு மற்றும் இன்னுமொரு உத்தியோகத்தரிற்கும் ஒப்படைக்கப்பட்டுள்ளது பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் கீழ் ஆவதுடன் துறைமுகத்தினால் கொடுப்பனவு செய்யப்படுவது பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு மாத்திரமாகும். அவ்வாறே கொடுப்பனவு உறுதி செய்ய வேரொறு | நிதிப்பிரமாணம் பிரகாரம் வவுசர்களை சான்றுருதி செய்யாது கொடுப்பனவு செய்யக் கூடாது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | உத்தியோகத்தர் துறைமுகத்தில் இல்லை. | |
| (ii) | நி.பி. 262 (2) | திக்ஓவிட மீன்பிடி துறைகத்தினால் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்படும் எவ்வித கொடுப்பனவு வவுசர்களிலும் ‘‘செலுத்தப்பட்டது’’ முத்திரை இடப்பட்டிருக்கவில்லை. | எரிபொருள் கொள்வனவு செய்யும் போது கொடுப்பனவு வவுர்களை உறுவாறு தயாரிக்குமாறு துறைமுக முகாமையாளரிற்கு எடுத்து மூலம் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது டன் தற்போது சரியாக அந்த செயன்முறை இடம்பெறுகின்றது. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | நி.பி. 502(2) | நிதிப்பிரமாணம் பிரகாரம் நிலையான சொத்து பதிவேடு ஒன்றை கூட்டுத்தாபனத்தினால் பேணியிருக்கவில்லை. | உரியவாறு தயாரிக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நிலையான சொத்து பதிவேடு ஒன்றை பேணிச் செல்ல வேண்டும். |
| (iv) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய அரச நிதி சுற்றறக்கை இலக்கம் 01/2020 இன் 19 பிரிவினால் திருத்திய நிதிப்பிரமாணம் 756 (6) | வருடாந்த பண்டக கணிப்பீட்டு அறிக்கை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் வருடாந்த பண்டக கணிப்பீடு தொடர்பான நடவடிக்கைகளை நிரைவு செய்ததாக அரச நிதி பணிப்பாளரிற்கு ஜுன் 30 திகதிக்கு முன்னர் அறிக்கையிட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் உரியவாறு அனுப்ப நடவடிக்கை எடுக்கிறேன். | சுற்றறிக்கை பிரகாரம் பண்டக கணப்பீட்டை மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவையின் முதலாம் பகுதியின் VII ஆம் அத்தியாயத்தின் 7.8 ஆம் பிரிவு | உத்தியோகத்தர் ஒருவரின் சம்பளமற்ற விடுமுறைக்கான (Nopay) அறவீட்டை கணிப்பிடும் போது அவரின் நிரந்தர பதவிக்குரிய இணைந்த சம்பளம், வாழ்கை செலவு கொடுப்பனவு மற்றும் ஏனைய படிகள் இருப்பின் அதனையும் சேர்க்க வேண்டிய போதும் கூட்டுத்தாபனத்தினால் உத்தியோகத்தர்களின் அடிப்படை சம்பளத்தை மாத்திரம் அடிப்படையாக்க கொண்டு சம்பளமற்ற விடுமுறை | சம்பளமற்ற விடுமுறை நாட்களிற்காக அறவீடு கணிப்பிடும் போது தாபன விதிக்கோவை முதலாம் பகுதியின் vii ஆம் அத்தியாயத்தின் 7.8 ஆம் பிரிவின் பிரகாரம் தற்போது கணிப்பீடு | தாபன விதிக்கோவை பிரகாரம் சம்பளமற்ற விடுமுறை நாட்களிற்காக அறவீடுகள் கணிப்பிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நாட்களிற்காக (Nopay) அறவீடு கணிப்பிடப்பட்டிருந்தது. | செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் PED 1/2015, 2016 ஒக்டோபர் 26 திகதிய PED1/2015(i) மற்றும் 2022 சனவரி 14 திகதிய PED1/2015(ii) | மாதாந்த எரிபொருள் படி போதாத விசேட சந்தர்ப்பங்களில் பணிப்பாளர் சபை அல்லது அமைச்சின் செயலாளரின் உரிய அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டியதுடன் கூட்டுத்தாபனத்தினால் அவ்வாறு அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாது ரூபா 1,410,485 பெறுமதியான 4,070 லீற்றர் எரிபொருள் 5 உத்தியோகத்தர்களிற்கு விநியோகிக்கப்பட்டிருந்தது. | அங்கீகாரம் பெறப்படாத எரிபொருள் படிகளிற்காக, அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள பணிப்பாளர் சபை பத்திரமொன்றை தயாரித்து ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ள பணிப்பாளர் சபை கூட்டத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் மேலதிக எரிபொருள் தொடர்பாக உரிய அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2006 அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவை | | | |
| (i) | 4.2.1 பந்தி | குறைந்தப்பட்சம் 03 ஆண்டு காலங்களிற்காக எதிர்ப்பார்த்த பெறுகை நடவடிக்கைகள் உள்ளடங்கிய பிரதான பெறுகை திட்டமொன்றை தயாரிக்க வேண்டிய போதும் கூட்டுத்தாபனத்தினால் 03 ஆண்டு காலத்திற்காக பிரதான பெறுகை திட்டமொன்றை தயாரித்திருக்கவில்லை. | 03 ஆண்டு காத்திற்காக எதிர்ப்பார்த்த பெறுகைகள் திட்டமொன்றை தயாரித்திருக்கவில்லை. | 03 ஆண்டு காத்திற்காக பிரதான பெறுகைகள் திட்டமொன்றை தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 4.2.2 பந்தி | கூட்டுத்தாபனத்தினால் 2024 ஆண்டிற்காக ஒவ்வொறு பெறுகைகள் செயற்பாடுகளினதும் படிமுறைகளை காலஎல்லையுடன் விபரிக்கும் பெறுகைகள் நேரசூசியொன்றை தயாரித்து இருக்காததுடன் மேற்கொண்ட பெறுகைகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2024 ஆண்டிற்காக ஒவ்வொறு பெறுகைகள் செயற்பாடுகளினதும் படிமுறைகளை காலஎல்லையுடன் விபரிக்கும் பெறுகைகள் நேரசூசியொன்றை தயாரித்து இருக்காததுடன் 2025 ஆண்டிற்காக தயாரிக்க நடவடிக்கை எடுக்கிறேன். | பெறுகைகள் நேரசூசியை தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலக்க பொது முயற்ச்சிகள் சுற்றறிக்கையின் பொது முயற்ச்சிகளிற்கான வழிகாட்டியின் 2.3 பின்இணைப்பு 1 இன் 3 பந்தி | மீளாய்வாண்டிற்காக கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த பாதீட்டின் பாதீட்டு வருமானக்கூற்று, பாதீட்டு நிதிநிலைமை கூற்று மற்றும் பாதீட்டு காசுப்பாய்ச்சல் கூற்றை உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் மீண்டெழும் மற்றும் மூலதன செலவினத்திற்காக மாத்திரம் பாதிடப்பட்ட பாதீட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டிற்காக வருடாந்த பாதீட்டின் பாதீட்டு வருமான கூற்று, பாதீட்டு நிதிநிலைமை கூற்று, பாதீட்டு காசுப்பாய்ச்சல் கூற்றை தயாரித்து அரச ணக்காய்வு பிரிவிற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். | பொது முயற்ச்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பாதீட்டினுள் பாதீட்டு வருமானக்கூற்று, பாதீட்டு நிதிநிலைமை கூற்று மற்றும் பாதீட்டு காசுப்பாய்ச்சல் கூற்றை உள்ளடக்கப்பட வேண்டும். |

**1.8 நிதி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுதுவெல்ல மீன்பிடி துறைமுகத்தின் எனைய வருமானக் கணக்கிற்குரிய வங்கி நடைமுறை கணக்கிற்காக தயாரித்திருந்த 2024 திசெம்பர் வங்கி இணக்கக்கூற்றில் 2023 பெப்ரவரி மாதம் எரிபொருள் கணக்கிற்காக வைப்புச் செய்யப்பட்ட ரூபா 31,610 தொகை, 2023 திசெம்பர் மாதம் எரிபொருள் கணக்கிற்காக வைப்புச் செய்யப்பட்ட ரூப 47,374 தொகை மற்றும் வங்கியிலிடப்படாத ஏனைய வருமானம் ரூபா 248,102 தொகை வைப்புச் செய்யப்பட்ட போதும் மாற்றப்படாததாக குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அந்த மீதிகள் தொடர்பாக கண்டறிந்து சரிசெய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2025.09.18 திகதி தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வைப்புச் செய்யப்பட்ட போதும் மாற்றப்படாததாக குறிப்பிட்டிருந்த வைப்புக்களை கண்டறிந்து தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 100,708,340 தொகையான நட்டம் ஆனதுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 640,377,110 தொகையானது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 741,085,450 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு திறைசேரி நிதிஏற்பாடு மற்றும் செயற்பாட்டு விளைவு முறையே ரூபா 314,447,520 தொகையினால் மற்றும் ரூபா 323,929,418 தொகையினால் குறைந்தமை, ஆளணியினர் செலவினம் மற்றும் நிருவாக செலவினம் முறையே ரூபா 79,196,133 தொகையினால் மற்றும் ரூபா 53,674,773 அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமை இன்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 நவம்பர் 29 ஆம் திகதி தனியார் நிறுவனமொன்றினால் திக்ஓய மீன்பிடி துறைமுகத்தின் வடக்கு முனையத்தின் நிலக்கீழ் எரிபொருள் குழாய்களை பொருத்தும் போது 2,700 லீற்றர் அளவான எரிபொருள் கசிந்திருந்த போதும் 2025 மே 22 திகதி வரை ஐந்து ஆண்டுகள் கடந்துள்ள போதும் இந்த எரிபொருள் கசிவிற்குரிய நிறுவனத்திடமிருந்து அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக உள்ளக கணக்காய்வு பிரிவினால் மேற்கொண்ட விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்படும் விடயம் தொடர்பில் கவனம் செலுத்தி நட்டத்தை அறவிடுவது தொடர்பாக முன்நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த நிறுவனத்திடம் இருந்து பணம் செலுத்தப்பட்டுள்ளதா என பரீட்சித்து மற்றும் உடன்படிக்கையை பரீட்சித்து தேவையான சட்ட நடவடிக்கை எடுக்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | நிதி நிலைமை கூற்றில் ரூபா 143,041,969 ஆன நடைமுறை வேலையின் கீழ் உள்ள ரூபா 29,156,788 ஆன மீதி பல ஆண்டுகளாக முன்கொண்டு வரப்பட்ட போதும் அந்த மீதி தொடர்பாக தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 29,156,788.00 பெறுமதியுடைய நடைமுறை வேலையின் கீழ் காட்டியுள்ள மீதிகள் நீண்ட காலமாக நிலவி வரும் மீதியாவதுடன் இது தொடர்பான தகவல்களை சிவல் பிரிவிலிருந்து பெற்று தீர்க்க நடவடிக்கை எடுக்கிறேன். | நடைமுறை வேலை தொடர்பான இழப்பீட்டிற்காக ஒதுக்கீடு நிதிக்கூற்றுக்களில் இனங்காணல் மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | 2024 திசெம்பர் 31 திகதி முற்செலுத்தப்பட்ட கொடுப்பனவு ரூபா 40,747,319 ஆவதுடன் அந்த மீதியில் 2004 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரையான மீதி ரூபா 21,130,672 ஆனது. முற்செலுத்திய கொடுப்பனவுகளிற்குரிய மீதிகள் தொடர்பாக கண்டறிந்து தீர்ப்பதற்காக கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2024 ஆண்டிற்காக வழங்கப்பட்டிருந்த அனைத்து முற்செலுத்தல்களும் தீர்க்கப்பட்டுள்ளதுடன், 2004 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை தீர்க்கப்படாத மீதிகள் தொடர்பான தகவல்களை வினவி பெறுகைகள் பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | முற்செலுத்தப்பட்ட கொடுப்பனவுகளிற்கு உரிய மீதிகள் தொடர்பாக கண்டறிந்து தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரை பேருவலை வேலை அலகில் நட்டம் தொடர்ந்தும் அதிகரித்திருந்ததுடன் அந்த நட்ட நிலைமை 2023 ஆண்டில் ரூபா 25,229,770 தொகை மற்றும் 2024 ஆண்டில் ரூபா 25,153,706 | பேருவலை கைத்தொழில்ச்சாலையில் இயந்திரங்கள் திருத்தங்கள் செய்வது மாத்திரம் இடம்பெறுவதுடன், ஏனைய வெளிச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை. | வருமானம் உருவாக்குதல் மற்றும் செலவின கட்டப்பாடு தொடர்பாக நடவடிக்கை எடுப்பதன் ஊடாக |

| | | | |
|---|---|---|---|
| | தொகையானது. | அதனால் விஷேட வருமானமொன்றை உருவாக்கப்படாததுடன் கைத்தொழில்ச்சாலையில் வேலை புரியும் ஊழியர் சம்பளங்கள், பராமரிப்பு செலவினம் காரணத்தால் தொடர்ந்தும் பேருவலை கைத்தொழில்ச்சாலை நட்ட நிலைமை காண்பிக்கப்படும். | நட்ட நிலைமை கட்டுப்படுத்திக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | திக்ஓவிட்டை மீன்பிடி துறைமுகத்தில் வடக்கு முனையத்திற்கு சொந்தமாக 07 எரிபொருட் உந்திகள் காணப்படுவதுடன் 2025 மே 22 திகதியளவில் செயற்படு நிலையில் காணப்பட்டது 03 உந்திகள் மாத்திரமே. செயலிழந்துள்ள 04 உந்திகளில் ஒரு உந்தியின் mother board இனை 2022 ஆகஸ்ட் 01 திகதி குறித்த வழங்கல் நிறுவனத்தினால் திருத்த வேலைகளிற்காக கலற்றிச் செல்லப்பட்டிருந்ததுடன் 2025 மே 22 திகதி வரை கூட்டுத்தாபனத்தினால் அது தொடர்பாக பின்னூடல் செய்திருக்கவில்லை. இன்னுமொரு உந்தி 2018 ஆகஸ்ட் 14 திகதி முதல் செயற்படு நிலையில் இருக்கவில்லை. 2017 ஏப்ரல் 05 திகதி பொருத்தியிருந்த உந்தி பொருத்திய திகதி முதல் செயற்படாதிருந்ததுடன் எஞ்சிய உந்தி 2021 திசெம்பர் 23 திகதி முதல் செயற்படு நிலையில் இருக்கவில்லை. | இந்த உந்திகளை திருத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இயந்திர பிரிவிற்கு அறிவுரை வழங்கப்பட்டது. தனியார் நிறுவனமொன்றிடம் கொள்வனவு செய்யப்பட்ட அனைத்து உந்திகளும் எரிபொருள் விநியோக வேகம் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுவதன் காரணமாக மீனவர் எரிர்ப்பு எழுந்ததுடன், இதன் காரணமாக இந்த உந்திகளை பயன்படுத்துவது பிரச்சினைக்குிறயதானது. இந்த உந்திகளிற்காக முற்பணத் தொகை மாத்திரம் செலுத்தப்பட்டுள்ளதுடன் வேறு எவ்வித கொடுப்பனவும் செலுத்தப்படவில்லை. | வழங்கல் நிறுவனத்தினால் திருத்த வேலைக்காக கலற்றி அகற்றியுள்ள mother board மீள் பெற்றுக் கொள்ள விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஏனைய உந்திகளை விரைவில் திருத்தி பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் 2013 சனவரி 17 ஆம் திகதி 1015 உத்தியோகத்தர் கொண்ட ஆளணியினரை ங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் கூட்டுத்தாபனத்தின் 2025 ஜுலை 31 திகதிக்கு உண்மையான ஆளணியினர் 1308 உத்தியோகத்தர்கள் ஆனது. இதனுள் முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்படாத 433 உத்தியோகத்தர்களும் உள்ளடங்கப்பட்டிருந்தது. | ஆளணியினரை மீள் திருத்தம் செய்து, அங்கீகரித்துக்கொள்ள அமைச்சு செயலாளரிடம் அனுப்பியுள்ளது. | முகாமைத்துவ சேவை திணைக்களத்திடமிருந்து மேலதிக பதவிகளுக்காக அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலக்க பொது மயற்ச்சிகள் சுற்றறிக்கை செயற்பாட்டு கைநூளில் 6.6 பந்தி பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு ஆண்டறிக்கை கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களினுள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் கூட்டுத்தாபனத்தினால் 2024 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது 115 நாட்கள் தாமதத்துடன் அதாவது 2025 ஜுன் 23 ஆம் திகதியாகும். | 2025 ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு ஆண்டறிக்கை மற்றும் அறிக்கைஉரிய திகதிகளில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கிறேன். | நிதிக்கூற்றுக்கள் உரிய திகதிகளில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 4.2 சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திக்ஓவிட்டை மீன்பிடி துறைமுக வடக்கு முனையத்தில் கழிவு பொருள் வெளியேற்றுவது வாடகை அடிப்படையின் மீது தனியார் தரப்பினர்களினால் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அந்த தரப்பினர் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் விநியோகிக்கப்படும் சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொண்டிருக்காததுடன் அதன் பிரகாரம் கழிவு பொருட்களை வெளியிடவது தொடர்பாக முறையான செயன்முறையொன்றை பின்பற்றி இருந்ததா எனவும் கணக்காய்விற்கு தெளிவாகவில்லை. | திக்ஓவிட்டை மீன்பிடி துறைமுகத்தில் நிரந்தரமாக ஒன்று சேரும் கழிவு பொருட்களை முறையானவாறு வெளியேற்றுவதற்காக வத்தலை பிரதேச சபையுடன் கலந்துரையாடி தற்போது உக்கலடையும் குப்பைகளை மாத்திரம் துறைமுக வளவில் குழியொன்றை வெட்டி புதைக்க பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ளது. உக்கலடையாத பொலிதீன் போன்ற கழிவு பொருட்கள் பிரதேச சபையினாலயே கொண்டுச்செல்ல நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் கழிவு பொருட்களை கொண்டு செல்வதற்காக தனியார் பிரிவிற்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவை தற்போது நிறுத்தியுள்ளது என தெறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றாடல் அதிகார சபையினால் விநியோகிக்கப்படும் சுற்றாடல் அனுமதிப்பத்திரமொன்றை பெற்றுக்கொள்வதை மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் குப்பை வெளியேற்றுவத தொடர்பாக முறையான செயல்முறையொன்றை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |